அலவன்ஸ் உயர்த்தப்பட்டது. அதைப்போல் இந்தப் பிரயாணப் படியையும் உயர்த்துவதற்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டியர்னஸ் அலவன்ஸ் அதிகப் படுத்தியதுபோல் இந்தப் பிரயாணப்படியை உயர்த்துவதற்கு உத்தேசம் இல்லை.

Family Pension Scheme

* 395 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to liberalise the Family Pension Scheme extended to the widows and minor children of the deceased Government servants; and

(*b*) if so, the details thereof ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : இப்பொழுது மத்திய அரசாங்கத்திலே ஊழியம் செய்து இறந்து போனவர்களுடைய மனைவிகளுக்கு— விதவைகளுக்கு ஆயுட்காலம் வரைக்கும், குழந்தைகளுக்கு—ஆண்களாக இருந்தால் மேஜர் ஆகும் வரைக்கும், பெண்களாக இருந்தால் திருமணம் ஆகும் வரைக்கும் குடும்ப ஒய்வு பணம் கொடுப்பதற்குத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நம்முடைய சர்க்கார் இனியாகிலும் பரிசீலனை செய்து லிபரலைஸ்ட் பென்ஷன் கொடுக்க உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இவ்விஷயத்தில் மத்திய அரசாங்கத்தில் என்னென்ன மாறுதல் செய்யப்பட்டிருக்கிறதோ அதையெல்லாம் நமது அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

பொற்கொல்லர்களின் புனர்வாழ்வு

* 396 கேள்வி.—திரு. எம். எஸ் செல்வராஜன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாகாணத்தில் தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் எத்தனை பேர்?

(இ) செப்டம்பர் 1964 முடிய வேலை தேடிக்கொடுக்கும் ஸ்தாபனங்களில் பதிவு செய்து கொண்டவர்கள் எத்தனை பேர்?

(உ) இதுவரை எத்தனை பேருக்கு மாவட்டவாரியாக வேலை கிடைத்திருக்கிறது ?

10th November 1965]

(எ) குடியிருப்புக்கும், பயிர் செய்வதற்கும் நிலம் கோரியவர்கள் எத்தனை பேர்?

(ஐ) எத்தனை பேருக்கு குடியிருப்புக்கு நிலமும், பயிர் செய்வதற்கு நிலமும் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : *(a) to (e)* A statement [a] is placed on the Table of the House.

Another statement [b] giving particulars of the loans sanctioned and disbursed to displaced goldsmiths up to 30th September 1965 is also placed on the Table of the House.

திரு. சா. கணேசன் : பொற்கொல்லர்களினுடைய நிலைமை மேலும் மேலும் சிரமமானதாகவும், கஷ்டமானதாகவும் ஆகிக் கொண்டு வருவதினாலே இன்று தங்க லோன்கள் வாங்கப்படுவதால், பல அளவுகளில் நகைகள் செய்வது தளர்த்தப்பட்டிருக்கிற காரணத்தினால் இன்றுள்ள நிர்ப்பந்தங்களைப் பொற்கொல்லர்களுக்கு நீக்கி சுதந்திரமாகவோ அல்லது எளிய அளவிலே உள்ள நிலையிலோ இதை மாற்றி அமைக்க சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தங்கக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவது மத்திய சர்க்கார் செய்யவேண்டிய விஷயம்.

திரு. ர. ஜீவரத்னம் : கனம் தலைவர் அவர்களே, தங்கப் பத்திரத்திலே தங்க முதலீடு செய்யவேண்டுமானால் சிலரிடத்திலே தங்கம் இல்லை. பணம்தான் இருக்கிறது. பணத்தைப்போட்டுத் தங்கத்தை வாங்கவேண்டுமென்றால் தங்கக் கட்டுப்பாடு தடை செய்கிறது. இதை முன்னிட்டாகிலும் மத்திய அரசுக்கு நம்முடைய அரசு தங்கக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டுமென்று சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தங்கப்பத்திரம் வாங்க வேண்டுமானால் தங்களிடத்திலே உள்ள தங்கத்தை பொதுமக்கள் கொடுக்க வேண்டுமென்று தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களிடமிருந்து இந்தத் தங்கத்தை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை இல்லை. தங்கக் கட்டுப்பாடு விதிகளைத் தளர்த்த வேண்டுமென்றால், இது பார்லிமெண்டில் கேட்கவேண்டிய விஷயம்.

திரு. செ. மாதவன் : கிட்டத்தட்ட 29,500 மனுக்கள் பெறப் பெற்றிருக்கின்றன. இதில் 19,000 மனுக்கள்தான் பரிசீலனை செய்யப்பட்டு கடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாதிக்குப்பாதிக் குறைவாகக் கொடுக்கப்பட்டதன் காரணம் என்ன ? எமெர்ஜென்சி காரணமாக லோன் கொடுக்க முடியாது என்ற காரணமா ? அல்லது பணம் இல்லாத குறை நமது சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது என்ற காரணமா ?

---

a Printed as Appendix II on pages 783–784.

b Printed as Appendix III on pages 785–786.

[10th November 1965

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் ஸ்டேட்மெண்டைப் படித்துப்பார்த்தாலேயே புரிந்துகொண்டிருக்கலாம். 37,000 மனுக்களில் 8,000 மனுக்கள் தகுதியற்றவை என்று தள்ளுபடி செய்யப்பட்டது. பாக்கியிருக்கிற மனுக்களை 30,000 என்று வைத்துக்கொள்வோமானால், 20,000 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அதற்காக 2 கோடியே 8 லட்சத்தி சொச்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் குறை இருக்கிறதென்றோ, சர்க்கார் சரிவர கொடுக்கவில்லை என்றோ சொல்வதற்கு ஒன்றுமே இல்லை.

திரு. வை. சங்கரன் : பொற்கொல்லர்கள் பரம்பரை பரம்பரையாக அதிகப் படிப்பிற்குச் செல்லாது இந்தத் தொழிலை நடத்தி வந்தார்கள். தங்கக் கட்டுப்பாடுக்குப் பிறகு "எக்ஸ்சேன்ஜ் ஆபீசர்" மூலமாகச் செல்லும்போது கல்வி, தகுதி உத்தேசித்து அவர்களுக்கு வேலை கொடுக்காத காரணத்தால் கோவாப்பரேட்டிவ் மில்கள் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில்களில் பொற்கொல்லர்களுக்கு இடம் ஓரளவுக்காவது ஒதுக்கி அவர்களுக்கு வேலை கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒவ்வொரு தொழில் ஆரம்பிக்கும்போதும் ஒரு பகுதி மக்கள் சம்பந்தமாக ஏற்படுத்தப்படுகிறது. உதாரணமாக, இப்போது கூட்டுறவு மில்களை எடுத்துக்கொள்வோமானால் கைத்தறி நெசவாளர் சங்கங்கள் இதற்கு பணம் போட்டு இருக்கின்றன. கைத்தறி நெசவாளருக்கு முதலிடம் கொடுத்து 50 சதவிகிதம் இடங்களை அவர்களுக்கு ஒதுக்கி இருக்கிறோம். பாக்கி உள்ள 50 சதவிகிதம் இடங்களுக்கு பொற்கொல்லர்களுக்கு 'ப்ரபரன்ஸ்' உண்டு.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, 31—3—1965-க்கு முந்தி வந்த மனுக்களைத்தான் அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாக தெரிகிறது. அதைத் தளர்த்தி 31—3—1965-க்குப் பின் வந்த மனுக்களையும் பரிசீலனைக்கு எடுத்து அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மனுக்கள் 7, 8 காரணத்திற்குப் போட முடியும். 31—3—1965-க்கு முன் வந்த மனுக்கள், கனம் உறுப்பினர் குறிப்பிடுவது, தாங்களே லைசன்ஸ் பெற்று நகைகள் செய்யவேண்டும் என்பதற்கு போடுகிற மனுக்கள். ஒரு தரம் இதற்கு தேதி நிர்ணயம் செய்தோம். மறுபடியும் அதை நீடிக்க உத்தரவு போட்டோம். மறுபடியும் நீடித்து மற்றொரு உத்தரவு போட்டோம். மூன்று முறை நீடிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : கிட்டத்தட்ட 8,000 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதன் காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விதிகள் இருக்கின்றன. தகுதி இல்லை என்று தள்ளப்பட்டிருக்கிறது.